## காங்கயம் நகராட்சி
## அவசரக்கூட்டம்

**காங்கயம் நகராட்சியின் அவசரக்கூட்டம் நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் பங்குனி–25 –ஆம் நாள் ஆங்கில வருடம் 2022 ஏப்ரல் 8 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு காங்கயம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்ய இருப்பதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**இடம் : காங்கயம்** — **நகர்மன்றத்தலைவர்**
**நாள் : 07.04.2022** — **காங்கயம் நகராட்சி**

**பொருள் எண் : 1**

**ந.க.எண். 615 /2022/அ1**

சொத்துவரி, காலிமனைவரி **01.04.2022** முதல் வரி சீராய்வு செய்வது குறித்து தமிழக அரசால் ஆணையிடப்பட்ட அரசாணை (நிலை) எண்**.52** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–4) துறை, நாள்**.30.03.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்**.40032/2012/**ஆர்**1,** நாள்**.01.04.2022** ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 97 |
| **நாள் :** | 08.04.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்: 2**

**ந.க.எண்.615 /2022/அ1**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

**15–**வது மத்திய நிதி ஆணையம், **2022–2023–**ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என

அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம்2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது.

மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு

தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு **2022–2023** முதலாம் அரையாண்டு **(01.04.2022)** முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு **4** வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.**52** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் **30.03.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.**40032/2012**/ஆர்**1**, நாள்.**01.04.2022** ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | தற்போதய மண்டலம் | மண்டல மதிப்பு | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) / உபயோகம் | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு |
| 1 | A | 0.90 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 1.125 |
| | | | 601-1200 | 1.5 | 1.35 |
| | | | 1201-1800 | 1.75 | 1.575 |
| | | | >1801 | 2 | 1.80 |
| | | | வணிகம் | 2 | 1.80 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.575 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 1.575 |
| 2 | B | 0.70 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.875 |
| | | | 601-1200 | 1.5 | 1.05 |
| | | | 1201-1800 | 1.75 | 1.225 |
| | | | >1801 | 2 | 1.40 |
| | | | வணிகம் | 2 | 1.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொழிற்சாலை | **1.75** | **1.225** |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | **1.75** | **1.225** |
| 3 | C | **0.40** | குடியிருப்பு | | |
| | | | <=600 | **1.25** | **0.50** |
| | | | 601-1200 | **1.5** | **0.60** |
| | | | 1201-1800 | **1.75** | **0.70** |
| | | | >1801 | **2** | **0.80** |
| | | | வணிகம் | **2** | **0.80** |
| | | | தொழிற்சாலை | **1.75** | **0.70** |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | **1.75** | **0.70** |

**மண்டல அடிப்படை மதிப்புநிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) **600** சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **25%** சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) **601** முதல் **1200** சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **50%** சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) **1201** முதல் **1800** சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **75%** சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) **1800** சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு**100%** சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் **100%** சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் **75%** சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு**

காலிமனை வரிவிதிப்பிற்கு, **1** சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு **100** சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின்

பரப்பளவிற்கு **இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள** காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். அதற்கான மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | தற்போதய மண்டலம் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு | புதிதாக நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு |
|---|---|---|---|
| 1 | A | 0.30 பைசா | 0.60 பைசா |
| 2 | B | 0.20 பைசா | 0.40 பைசா |
| 3 | C | 0.10 பைசா | 0.20 பைசா |

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் **6** % உயர்வு அல்லது கடந்த **5** ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும், காங்கயம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண் | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் நிலுவை | 0.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் நிலுவை | | | 0.72 |
| 3 | பிற துறைகளுக்கு செலுத்த நிலுவைத் தொகை விபரம் | | | இல்லை |
| 4 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | | | |
| | **வ. எண்** | **நிறுவனம்** | **கடன் விவரம்** | |
| | 1 | டுபிட்கோ | தவணை முறையில் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் | 1.04 |
| | 2 | டுபிட்கோ | ஒருங்கிணைந்த கூட்டுக்குடிநீர் திட்டம் | 0.24 |
| 5 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | | | இல்லை |
| | | | **மொத்தம்** | **2.70** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், காங்கயம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள்/ தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | புதிய தெருவின் பெயர் |
|---|---|
| **"A" மண்டலம் ( ஏற்கனவே உள்ள மண்டலம் மதிப்பு ரூ. 0.90 பைசா )** | |
| 1 | மெய்ஞானபுரம் |
| 2 | தீரன் நகர் |
| 3 | தாராபுரம் ரோடு மெயின் ரோடு |
| 4 | கே.எஸ்.ஆர் வீதி |
| **"B" மண்டலம் ( ஏற்கனவே உள்ள மண்டலம் மதிப்பு ரூ. 0.70 பைசா )** | |
| 5 | புதுவாய்க்கால் மேடு 1 வது வீதி |
| 6 | புதுவாய்க்கால் மேடு 2 வது வீதி |
| 7 | பாரதியார் வீதி 1 வது வீதி |

| | |
|---|---|
| 8 | பாரதியார் வீதி 2 வது வீதி |
| 9 | திருமலை நகர் |
| 10 | ஏ.சி. வெங்கு (எ) மணிமாறன் நகர் |
| 11 | வேல்நகர் |
| 12 | தாமரை நகர் |
| 13 | தமிழ் நகர் |
| 14 | துவாரகா நகர் |
| 15 | ஏ.சி. வெங்கு நகர் |
| 16 | ராஜிவ் நகர் |
| 17 | பொதிகை நகர் |
| 18 | அய்யாசாமிநகர் காலனி 6 வது வீதி |
| 19 | தாராபுரம்  ரோடு 2 வது வீதி |
| 20 | தாராபுரம்  ரோடு 3 வது வீதி |
| 21 | அமராவதி நகர்1வது வீதி |
| 22 | அமராவதி நகர்2வது வீதி |
| 23 | அருள் ஜோதி நகர் |
| 24 | ஆதித்யா கார்டன் |
| 25 | அருள் ஜோதி நகர் |
| 26 | குதிரைப்பள்ளம் ரோடு மேற்கு |
| 27 | சக்தி நகர் (தாராபுரம் ரோடு) 1 வது வீதி |
| 28 | சக்தி நகர் (தாராபுரம் ரோடு) 2 வது வீதி |
| 29 | சக்தி நகர் (தாராபுரம் ரோடு) 3 வது வீதி |
| 30 | சக்தி நகர் (தாராபுரம் ரோடு) 4 வது வீதி |
| 31 | பாரதியார் வீதி 1 வது வீதி |
| 32 | கோவை ரோடு 4வது வீதி |
| 33 | கோவை ரோடு 5வது வீதி |
| 34 | உடையார் காலனி 1 வது வீதி |
| 35 | உடையார் காலனி 2 வது வீதி |
| 36 | லட்சுமி நகர் 1 வது வீதி |

| | |
|---|---|
| 37 | லட்சுமி நகர் **2** வது வீதி |
| 38 | காந்தி வீதி |
| 39 | பாப்பாங்காடு |
| **“C” மண்டலம்<br>( ஏற்கனவே உள்ள மண்டலம் மதிப்பு ரூ. 0.40 பைசா )** | |
| 40 | திரு.வி.க. நகர் **1** வது வீதி |
| 41 | திரு.வி.க. நகர் **2** வது வீதி |
| 42 | திரு.வி.க. நகர் **3** வது வீதி |
| 43 | திரு.வி.க. நகர் **4** வது வீதி |
| 44 | திரு.வி.க. நகர் **5** வது வீதி |
| 45 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **1** வது வீதி |
| 46 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **2** வது வீதி |
| 47 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **3** வது வீதி |
| 48 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **4** வது வீதி |
| 49 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **5** வது வீதி |
| 50 | ஏ.சி.நகர் திருப்பூர் ரோடு **6** வது வீதி |
| 51 | என்.எஸ்.என் நகர் |
| 52 | A.S.P வேதா நகர் |
| 53 | கோட்டைமா நகர்**1** வது வீதி |
| 54 | கோட்டைமா நகர் **2**வது வீதி |
| 55 | கோட்டைமா நகர் **3**வது வீதி |
| 56 | கோட்டைமா நகர் **4**வது வீதி |

**அலுவலகக்குறிப்பு :**

**அ. 01.04.2022** முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுசீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆ.** பொதுமக்களுக்கு சொத்துவரி சீராய்வு குறித்து தினசரி நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்திடவும், அரசிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 98 |
| **நாள் :** | 08.04.2022 |
| **தீர்மானம் :** | அ.) மொத்தம் **15** உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் அ.இ.அ.தி.மு.க **4** நகர்மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார்கள். மீதம் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களால் **01.04.2022** முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பினை ஏற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட தெருக்கள் மற்றும் தெருக்களுக்கான மண்டலங்களை ஏற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br>ஆ) இதற்கான செலவினம் அனுமதிக்கப்பட்டது. |

**நகர்மன்றத்தலைவர்**
**காங்கயம் நகராட்சி**